**காலாண்டு பொதுத் தேர்வு செப்டம்பர் - 2018.**

**பத்தாம் வகுப்பு தமிழ் முதல் தாள் விடைக்குறிப்பு.**

| | | |
|---|---|---|
| **I** | **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** | **6×1=6** |
| 1 | ஆ) ஞானப்பிரகாசன் | 1 |
| 2 | ஆ) ஆறு | 1 |
| 3 | ஆ) நற்றிணை | 1 |
| 4 | இ) மூன்றாம் | 1 |
| 5 | இ) திரு.வி.க | 1 |
| 6 | ஆ) மதுரைக்காஞ்சி | 1 |
| **II** | **கோடிட்ட இடங்களை நிரப்புக.** | **6×1=6** |
| 7 | புதுக்கோட்டை. | 1 |
| 8 | துடி. | 1 |
| 9 | வரப்புகளாய். | 1 |
| 10 | பொருளியல். | 1 |
| 11 | இனிப்புப். | 1 |
| 12 | முரண்களையும் மூடக்கருத்துகளையும். | 1 |
| **III** | **பொருத்துக.** | **4×1=4** |
| 13 | செறு - வயல் | 1 |
| 14 | வித்து - விதை | 1 |
| 15 | யாணர் - புதுவருவாய் | 1 |
| 16 | வட்டி - பனையோலைப்பெட்டி | 1 |
| **IV** | **விடைக்கேற்ற வினா அமைக்கவும். (ஏற்ற வினா அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்)** | **4×1=4** |
| 17 | பெரியார் எதனை விரும்பினார்? | 1 |
| 18 | எதன் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்? | 1 |
| 19 | தமிழர்கள் யார்யாருடன் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள்? | 1 |
| 20 | மனித நாகரிகத் தொட்டில் எது? | 1 |
| **V** | **எவையேனும் ஐந்தினுக்கு மட்டும்.** | **5×2=10** |
| 21 | நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம். | 2 |
| 22 | ◆ பிறருக்குப் பணிந்து நடத்தல்.<br>◆ நல்வழியில் நடத்தல்.<br>◆ சான்றோர் அறிவுரையை கேட்டல்.<br>◆ நுட்பமான நூல்களைப் படித்து அதன்படி நடத்தல். | 2 |
| 23 | ◆ பிரிந்து செல்ல விருப்பம் இல்லை.<br>◆ தங்களுக்கு தொண்டு செய்வேன். | 2 |
| 24 | வாழை இலை அரியும் போது உள்ளங்கையில் பாம்பு கடித்தது. | 2 |
| 25 | ◆ வைதருப்பம் ◆ கௌடம் ◆ பாஞ்சாலம் ◆ மாகதம். | 2 |
| 26 | தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம். | 2 |
| 27 | பால், முந்திரி, வாழை, இளநீர் போல் பல்வகையான சுவைகள். | 2 |
| **VI** | **எவையேனும் ஐந்தினுக்கு மட்டும்.** | **5×2=10** |
| 28 | மூவாயிரம். | 2 |
| 29 | ஒரு மொழிப்படத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறைக்கு, மொழிமாற்றம் என்று பெயர். | 2 |
| 30 | ◆ ப∴றுளி ஆறு. ◆ குமரி மலை. | 2 |
| 31 | ◆ 1924 இல் கேரளா-வைக்கத்தில் பெரியார் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுப் போராட்டம்.<br>◆ 1927 இல் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் அம்பேத்கர் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டம். | 2 |
| 32 | ◆ தமிழ்த்தென்றல் திரு.வி.க ◆ பேரறிஞர் அண்ணா ◆ ரா.பி.சேதுப்பிள்ளை ◆ குன்றக்குடி அடிகளார் | 2 |
| 33 | அக்காலத்தே விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. | 2 |
| 34 | ◆ தொல்காப்பியம் ◆ சங்கஇலக்கியம் ◆ சிலப்பதிகாரம் ◆ தேவாரம் | 2 |

| | | |
|---|---|---|
| **VII** | **எவையேனும் மூன்றினுக்கு மட்டும்** | **3×4=12** |
| 35 | **சிபிச்சக்கரவர்த்தி:** சோழநாட்டு மன்னர்களுள் ஒருவன் சிபிச்சக்கரவர்த்தி. வேடனிடமிருந்து புறாவைக் காப்பதற்காகதன் தசையைஅறுத்துக் கொடுத்தும் ஈடாகாமையால் தானே துலைத்தட்டில் ஏறி நின்றான்.<br>**மனுநீதிச்சோழன்:** தன் அரண்மனை மணி ஒலியைக் கேட்டு, பசுவின் துயர் அறிந்து, தன் ஒப்பற்றமகனையே தேர்ச்சக்கரத்தைச் செலுத்தி கொன்று நீதி வழங்கினான். | **4** |
| 36 | ◆ பல்வேறு துறை நூல்களை தமிழில் வெளியிடல் வேண்டும்.<br>◆ தமிழறிவை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும்.<br>◆ இலவச நூல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.<br>◆ தமிழின் பெருமைகளைக் கூறுவதை விடுத்து குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைக்க வேண்டும். | **4** |
| 37 | விரைந்து படகைச் செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டடையிட்டான். உயிரின் ஏவலுக்கு மெய் செயல்படுவது போலக் குகனும் படகினை விரைவாகச் செலுத்தினான். மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றின் இளம் அன்னம் விரைந்து செல்வதனைப் போலப் படகு சென்றது. | **4** |
| 38 | அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும், அவ்வரசர் முன்னிலையில் யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று. அது அவரவரின் முன்வினைப் பயனே. தன்னிடம் அடைக்கலம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வமெனச் சான்றோர் கூறுவர். | **4** |
| 39 | ◆ கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்ளுள் ஒருவர்.<br>◆ கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறந்தபொழுது உடன் இருந்தவர். | **4** |
| **VIII** | **எவையேனும் மூன்றினுக்கு மட்டும்** | **3×4=12** |
| 40 | **மணக்கொடை:** தமிழர்களிடம் இன்று உள்ள பெருநோய் மணக்கொடை. பெற்றோர்கள் தம் மகனின் கல்விச் செலவுகளுக்காகச் செலவழித்த பணத்தை முதலீடாய்க் கருதுகின்றனர். அம்முதலீட்டை அவனுக்கு வரப்போகும் மனைவியின் மூலம் பெற்றுவிட விரும்புகின்றனர். மணக்கொடை ஒழிக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்.<br>**கைம்மை ஒழிப்பு:**கணவனை இழந்த பெண்கள் காலமெல்லாம் கைம்பெண்ணாக வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பெரியார் கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கு இல்லை என்று கூறினார். | **4** |
| 41 | ◆ 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார்.<br>◆ 1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.<br>◆ கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், இலண்டனில் முனைவர் பட்டமும் பெற்றார்.<br>◆ மீண்டும் இலண்டன் சென்று அறிவியலில் முதுகலைப்பட்டமும், பாரிஸ்டர் பட்டமும் பெற்றார். | **4** |
| 42 | ◆ பேச்சின் தொடக்கமே எடுத்தல் எனப்படும்.<br>◆ பேச்சின் தொடக்கம் நன்றாக இருந்தால் மட்டுமே, கேட்போரை வயப்படுத்த முடியும்.<br>◆ தட்டுத்தடங்களிலின்றி பேசுதல் வேண்டும்.<br>◆ சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவதே சிறப்புடையது.<br>◆ இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் வேண்டும். | **4** |
| 43 | ◆ தமிழர் கடல் வாணிகத்தில் சிறந்திருந்தனர்.<br>◆ பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்தனர்.<br>◆ கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து நாடுகளுக்கு அரிசி, மயில்தோகை, சந்தனம் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.<br>◆ கி.மு பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத்தந்தமும், மயில்தோகையும் அனுப்பப்பட்டன.<br>◆ தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது. | **4** |
| 44 | ◆ எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும்.<br>◆ பேச்சுக்கு கருத்துப்பொலிவும் குரலோசையும் மட்டும் போதாது.<br>◆ சுவைத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், சிறுசிறு கதைகள் பயன்படுத்த வேண்டும்.<br>◆ பேச்சின் அணிகள் அணு ஆற்றல் போல்வன. | **4** |
| **IX** | **பாடல் வரி வினா விடை.** | **5×1=5** |
| 45 | 1. தமிழ்விடுதூது.<br>2. ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.<br>3. செவி+அறுத்து.<br>4. தென்னை.<br>5. குட்டி-வெட்டி வளர்ந்தனை-கிளர்ந்தனை. | **1**<br>**1**<br>**1**<br>**1**<br>**1** |
| | **பத்தி வரி வினா விடை.** | **5×1=5** |
| 46 | 1. நடிகர்களின் நடிப்பையும் பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலிப்பதிவு செய்வர்.<br>2. உரையாடலில் எழும் ஒலி அலைகள் ஒரு நுண்ணொலிப் பெருக்கியைத் தாக்கும்.<br>3. மின் அதிர்வுகள்.<br>4. மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ஒளி மாறும்.<br>5. ஒலிப்பதிவு. | **1**<br>**1**<br>**1**<br>**1**<br>**1** |

| X | கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. | 2×8=16 |
|---|---|---|
| 47 அ | ◆ உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம். அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கம்.<br>◆ ஒழுக்கமே நல்ல துணை ஆகும். அதனை விரும்பிக் காத்தல் வேண்டும்.<br>◆ ஒழுக்கம் உள்ளவர் உயர்குடியினர். ஒழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர்.<br>◆ ஒழுக்கம் குறைந்தால், குடிப்பிறப்பின் சிறப்பு அழியும். பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது.<br>◆ ஒழுக்கம் தவறுதலால் வரும் குற்றங்களை உணர்ந்தோர் அதிலிருந்து சிறிதும் விலகமாட்டார்.<br>◆ ஒழுக்கம் உடையோர் மேன்மை அடைவர். ஒழுக்கம் இல்லாதவர் பழியை அடைவர்.<br>◆ நல்லொழுக்கம் நன்மைக்கான விதையாகும். தீயொழுக்கம் துன்பத்திற்கான விதையாகும்.<br>◆ நல்லொழுக்கம் உடையவர் தீய சொற்களைப் பேசமாட்டார்.<br>◆ உயர்ந்தவரோடு பொருந்தி வாழாதவர் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார். **(அல்லது)** | 8 |
| 47 ஆ | **அமுதுண்ண இசைதல்:** அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை வீட்டிற்குள் அழைத்து முறைப்படி பூசனை செய்தார். திருநாவுக்கரசரிடம் அமுது உண்ணும்படி விண்ணப்பம் செய்தார். அவரும் அதற்கு இசைந்தார். அப்பூதியடிகள் மனைவியார் அறுசுவை உணவினைத் தயார் செய்தார். அமுதுண்ண வாழையிலையை அரிந்து வருமாறு மூத்த மகன் திருநாவுக்கரசரை அனுப்பி வைத்தனர்.<br>**மூத்தமகனைப் பாம்பு தீண்டுதல்:** மூத்த திருநாவுக்கரசு வாழைத் தோட்டத்திற்குச் சென்று இலை அரியும்போது பாம்பு கடித்து இறந்து விடுகின்றான். திருநாவுக்கரசர் அமுதுண்ண வேண்டும் என்பதற்காக இச்செய்தியை மறைத்து விடுகின்றனர். திருநாவுக்கரசர் திருநீறு வழங்கும் போது மூத்த திருநாவுக்கரசு எங்கே எனக் கேட்டார். அப்பூதியடிகள் ‘இப்போது அவன் இங்கு உதவமாட்டான்’ என்று கூறிவிடுகிறார்.<br>**உயிர்த்தெழச் செய்தல்:** திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் உண்மையைக் கூறுமாறு கேட்க, அவரும் நடந்ததைச் சொல்லி விடுகிறார். இறந்த உடல் அருகே சென்று ‘ஒன்றுகொலாம்’ என்ற பதிகத்தைப் பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்த்தெழச் செய்தார். | 8 |
| 48 அ | **தொன்மை:** முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டம். அவன் பேசிய மொழி தமிழ். அக்குமரிக்கண்டத்தில் முதல், இடைத் தமிழ்ச்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டது. மூன்றாவது தமிழ்ச்சங்கம் இன்றைய மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது. இது மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தது என்பர்.<br>**பிறமொழித் தாக்கமின்மை:** காலச்சூழலே மொழிக் கலப்பினை ஏற்படுத்துகிறது. பிறமொழிச் சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்காது. ஆனால் தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இயங்கும். மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி தமிழ் மட்டுமே ஆகும்.<br>**தாய்மை:** தமிழானது திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாக விளங்குகிறது. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ்.<br>**தனித்தன்மை:** இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர். திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது.<br>**இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு:** உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது. | 8 |
| 48 ஆ | **கருத்துப்படம்:** ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைவர். ஒன்றுக்கொன்று சிறிது சிறிதாக மாறுவனவாக இருக்கும். இப்படங்களை வரிசைப்படி அடுக்கி வைத்துவிட்டு மிக வேகமாக ஏடுகளைப் புரட்டினால் அவை வெவ்வேறு படங்களாகத் தோன்றாமல் ஒரே நிகழ்வாகத் தோன்றும்.<br>**செய்திப்படம்:** உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையே படமாக்கிக் காட்டுவது செய்திப்படமாகும். திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாதும்.<br>**விளக்கப்படம்:** ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப் படமாகும். சான்றாக உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம்.<br>**கல்விப்படம்:** கல்வி கற்பிப்பதற்கென உருவாக்கப்படும் படங்கள் கல்விப் படங்கள். பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, நேரில் சென்று காணமுடியாத பல்வேறு இடங்கள் போன்றவற்றைக் காணலாம். | 8 |

| 49 | செய்யுள் வடிவில் விடை தருக. | | | 2+2+3+3=10 |
|---|---|---|---|---|
| அ | அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,<br>ஒழுக்கம் இலான்கண் உயர்வு. | ஆ | காலம் கருதி இருப்பர், கலங்காது<br>ஞாலம் கருது பவர். | 2+2 |
| இ | துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்<br>பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்<br>முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா<br>அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம். | | | 3 |
| ஈ | திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்<br>பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற<br>அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த<br>தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார். | | | 3 |

தயாரிப்பு : க.வேல்முருகன் எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்., அரசினர் மேல்நிலைப் பள்ளி, மங்கலம், திருவண்ணாமலை மாவட்டம்.